بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *16/07/2021* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. அன்னாரின் கிலாஃபத் காலம் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டிலிருந்து ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ பத்தரை ஆண்டுகளைக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தின் வெற்றிகளின் விசாலத்தைக் குறித்து ஷிப்லீ நுஃமானீ இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளின் மொத்த பரப்பளவு 22,51,030 (இருபத்தி இரண்டு இலட்சத்தி ஐம்பத்து ஓராயிரத்தி முப்பது) சதுரஅடி மைல் தூரம் ஆகிறது. இந்த வெற்றி பெறப்பட்ட பகுதிகளில் சிரியா, எகிப்து, ஈராக், ஈரான், குஜெஸ்தான், ஆர்மீனியா, ஆஸர்பாயிஜான், பாரஸீகம், கர்மான், குராஸான் மற்றும் மக்ரான் முதலிவை அடங்கும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது அனைத்து வேலை பளுக்களுக்கு மத்தியிலும், ஒவ்வொரு வெற்றியின் போதும் முஸ்லிம்களிடையே இருந்து வந்தார்கள். அன்னார் முறையாக போரில் கலந்து கொள்ளமாட்டார்கள் தான்; இருப்பினும், மதீனாவிலிருந்தே முஸ்லிம் படைத்தளபதிகளுக்கு வழிகாட்டல்கள் அனுப்பி வருவார்கள். தினமும் அவர்களுடன் கடிதத் தொடர்பு மேற்கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் அமர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்குத் தமது படைகளை வரிசைப்படுத்துவதற்கு வழிகாட்டல்கள் வழங்குவார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன், அந்தப் பகுதிகளின் வரைபடம் இருந்தது போல் அல்லது அந்தப் பகுதிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கண்முன் இருந்தது போல் முஸ்லிம்களுக்கு அந்தப் பகுதிகளைப் பற்றி கூறினார்கள்; வழிகாட்டல் வழங்கினார்கள். இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நான் தொழுகையில் இருக்கும் போது எனது படைகளை ஆயத்தம் செய்கிறேன்' என்று கூறிவந்தார்கள். அதாவது, அன்னார் எந்த அளவு கவலை கொண்டிருந்தார்கள் என்றால், தொழுகைக்கு இடையிலும் கூட இஸ்லாமிய படைகளுக்கான திட்டம் வகுக்கும் பணி தொடர்ந்து வந்தது. இதற்கிடையில், துஆவும் செய்து வந்திருப்பார்கள். இதன் காரணமாகவே, அன்னாரின் வழிகாட்டல்களைப் பின்பற்றியவாறு முஸ்லிம் படைகள் கஷ்டத்திலும் கஷ்டமான

நிலைமைகளிலும் கூட அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் வெற்றிகளைப் பெற்றார்கள் என்பது நமக்கு ஆங்காங்கே தென்படுகிறது.

சய்யித் மீர் மஹ்மூத் சாஹிப் அவர்கள் ஈரான் மற்றும் ஈராக் வெற்றி தொடர்பாக எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஈராக்கிய படைகளின் தலைமைப் பொறுப்பு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் கைகளில் இருந்தது. ஆனால், தமது கிலாஃபத் காலகட்டத்தின் இறுதியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியா போர்களின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கு சிரியா செல்ல கட்டளையிட்டார்கள்.

ஈராக்கிய படையின் தலைமைப் பொறுப்பு ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா அவர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நோயுற்று, இஸ்லாமிய படைகளுக்குத் தூதுச் செய்திகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாயிற்று. அப்போது, ஹஸ்ரத் முஸன்னா தமது துணை தளபதியை நியமித்து விட்டு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வரவழைத்து, தமது வஃபாத்துக்குப் பிறகு உடனடியாக முஸ்லிம்களுக்குப் போர் புரிய எழுச்சியூட்டி, ஒரு படையை ஹஸ்ரத் முஸன்னாவுடன் அனுப்பி விடுமாறு வலியுறுத்திக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வஃபாத் ஆனதற்குப் பிறகு தொடர்ச்சியாக மூன்று நாட்கள் வரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றி வந்தார்கள். ஆனால், மக்கள் ஈரானின் மேன்மை மற்றும் கம்பீரத்தின் காரணமாக அஞ்சியிருந்தனர். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இல்லாமல் ஈராக் வெற்றி சாத்தியமில்லை என்று மக்கள் கருதி வந்தனர். ஆனால், நான்காவது நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த அளவு அழுத்தமாக வலியுறுத்தினார்கள் என்றால், மக்களின் உள்ளங்கள் அச்சம் அடைந்து விட்டன. ஆக, அந்த எழுச்சியூட்டலின் விளைவாக 5000 பேரைக் கொண்ட படை தயராகி விட்டது.

ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஒரு போர் நடைபெற்றது. அது நுமாரிக் மற்றும் கஸ்கர் போர் எனப்படுகிறது. அதன் விளக்கம் இவ்வாறு இருக்கிறது: ஈரானிய அரசவை, தலைவர்கள் மற்றும் செல்வந்தர்களின் பரஸ்பர கருத்து வேறுபாடுகள் காரணமாக கஷ்டத்திற்கு உட்பட்டிருந்தது. இவ்வாறு ருஸ்தம் என்ற வடிவில் ஒரு புதிய நபர் தோன்றினார். அவர் மிக விரைவாகவே ஈரானிய அரசவை சார்பாக அனைத்தின் மீது ஆதிக்கம் பெற்றவராக ஆக்கப்பட்டார்.

ருஸ்தம் ஒரு வீரமானவராகவும் திட்டம் வகுக்கக்கூடிய மனிதராகவும் திகழ்ந்தார். அவர் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் தமது பணியாட்கள் மூலமாக கிளர்ச்சி செய்ய வைத்து விட்டார். ஹஸ்ரத் முஸன்னாவை எதிர்கொள்வதற்காக ஒரு படையை அனுப்பினார். இந்த சூழ்நிலையில் ஹஸ்ரத் முஸன்னா பின் வாங்கிச் செல்வதையே பொருத்தமானதாகக் கருதினார். மறுபுறம் ருஸ்தம் தொடர்ந்து முன்னேறிச் சென்றார். ஒரு அருமையான படையைத் தயார் செய்து இருவேறு வழிகளின் வாயிலாக, முஸ்லிம்களை எதிர்கொள்வதற்காக அனுப்பினார். ஒரு படையோ, ஜாபானின் தலைமையில் கூஃபாவுக்கு அருகில் 'நுமாரிக்' என்ற பகுதியில் வந்திறங்கியது. இன்னொரு படையோ, நர்ஸியின் தலைமையில் 'கஸ்கர்' சென்றடைந்தது. கஸ்கர் பாக்தாதுக்கும் பஸராவுக்கும் இடையில் தஜ்லா நதியின் மேற்குக் கரையோரம் அமைந்திருந்தது.

நுமாரிக்கில் ஹஸ்ரத் அபூ உபைத் அவர்களின் படையும் ஜாபானுடைய படையும் எதிரெதிரே மோதின. ஒரு பயங்கரமான போர் நடைபெற்றது. அதில்

ஈரானிய படை தோல்வியைத் தழுவியது. இந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாமிய நல்லொழுக்கத்தின் இந்த ஓர் உயரிய முன்மாதிரி காணக்கிடைத்தது:

ஈரானிய படையில் அரச அந்தஸ்த்து கொண்டிருந்த ஜாபான் சிறைபிடிக்கப்பட்ட போது, சிறைபிடித்த முஸ்லிம் போர்வீரர் தன்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்பதிலிருந்து பயனடைந்தவாறு, சப்தமில்லாமல் ஈட்டுத் தொகை வழங்கிவிட்டு விடுதலை பெற்று விட்டார். ஏனைய முஸ்லிம்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்த போது, அவர்கள் ஜாபானை மீண்டும் சிறைபிடித்து விட்டனர். ஆனால், முஸ்லிம் போர்வீரர் ஒருமுறை ஈட்டுத் தொகையைப் பெற்றுவிட்டு விடுவித்துவிட்ட ஒரு நபரை, மீண்டும் சிறைபிடிப்பதை ஹஸ்ரத் அபூ உபைத் அவர்களால் பொருத்துக் கொள்ள முடியவில்லை. ஆக, முஸ்லிம்கள் அருமையான போர் பலன்களைப் பெறுவதற்காகக் கூட நல்லொழுக்கத்தை கைநழுவ விடவில்லை.

ஸிகாத்தியா போர் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு நடைபெற்றது. நுமாரிக்கில் தோல்வியைத் தழுவிய ஈரானிய படை கஸ்கருக்கு ஓடிவிட்டது. அங்கு ஈரானிய படைத்தளபதி நர்ஸி முன்னரே ஒரு படையை வைத்துக் கொண்டு முஸ்லிம்களை எதிர்கொள்வதற்குத் தயராக இருந்தார். இங்கு, ஸிகாத்தியா போர்க்களத்தில் ஒரு பயங்கரமான போர் நடைபெற்ற பிறகு, அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது.

பாரூஸமாயா போரும் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்த இடம் கஸ்கர் மற்றும் ஸிகாத்தியாவுக்கு நடுவில் இருந்தது. அங்கு ஈரானிய படைத்தலைவர் ஜாலீனூஸ் உடன் போர் நடந்தது. பஸராவுக்கும் கூஃபாவுக்கும் இடைப்பட்ட ஊர்கள் 'அர்ஸு ஸவாத்' எனப்பட்டன. பாரூஸமாவும் பாகூஸியாஸாவும் இந்த ஊர்களில் இரண்டு ஊர்கள் ஆகும். அபூ உபைத் அவர்கள் பாகூஸியாஸா சென்றடைந்தார்கள். சிறிய போருக்குப் பிறகு ஈரானிய படைகள் தோல்வியைத் தழுவின.

ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டில், முஸ்லிம்களுக்கும் ஈரானியர்களுக்கும் இடையே ஃபுராத் நதிக்கரையோரம் ஜிஸ்ர் போர் நடைபெற்றது. முஸ்லிம்களின் படைத்தளபதியாக அபூ உபைத் ஸக்ஃபீ அவர்கள் இருந்தார்கள். ஈரானியர்கள் தரப்பிலிருந்தோ பெஹ்மன் ஜாஸ்வியா படைத்தளபதியாக இருந்தார். முஸ்லிம் படையின் எண்ணிக்கை 10,000 மாக இருந்தது. ஈரானிய படை 30,000 போர்வீரர்களைக் கொண்டிருந்தது. அதே வேளையில் ஈரானிய படையில் 300 யானைகளும் இருந்தன.

ஃபுராத் நதி இடைப்பட்டதன் காரணமாக இருபடைகளும் போர் புரியாமலிருந்தனர். எதுவரை என்றால், இருசாராரின் பரஸ்பர உடன்பாடோடு ஃபுராத் நதி மீது ஒரு பாலம் அமைக்கப்பட்டது. 'ஜிஸ்ர்' பாலத்துக்குச் சொல்லப்படும் சொல். இதன் காரணமாகவே இந்தப் போர் ஜிஸ்ர் போர் எனப்படுகிறது. பாலம் கட்டப்பட்ட பிறகு, ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் நதியைக் கடந்து பாரஸீகர்களின் படைமீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். இந்தத் தாக்குதலின் விளைவாக, முதலிலோ ஈரானிய படைகள் சிதறுண்டு போகலாயின. எனினும், பெஹ்மன் ஜாஸ்வியா தனது யானைகளை முன்னால் அனுப்பியதும், முஸ்லிம்களின் படைகள் சீர்குலைந்து போயின. இத்தகைய நிலையில், ஹஸ்ரத் அபூ உபைத் அவர்கள் யானைகளின் தும்பிக்கைகளை வெட்டி வீழ்த்துமாறு கட்டளையிட்டார்கள். தாமே முன்சென்று ஒரு யானையின் தும்பிக்கையை வெட்டி விட்டார்கள். ஏனைய முஸ்லிம் படையும் இதன் படி செயல்பட்டது. மிக மும்முரமான போர் நடைபெற்றது.

ஹஸ்ரத் அபூஉபைத் அவர்கள் மட்டுமின்றி, மேற்கொண்டு 6 நபர்கள் இஸ்லாமிய படையின் கொடியைத் தாங்கிப் பிடித்தவாறு ஒருவர்பின் ஒருவராக

ஷஹீதாகிக் கொண்டே சென்றனர். எட்டாவது தளபதியாக ஹஸ்ரத் முஸன்னா அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இஸ்லாமிய படையை மீண்டும் சீரமைத்து முழுமையான முறையில் தாக்கினார்கள். ஹஸ்ரத் முஸன்னா அவர்களும் காயமடைந்தார்கள். ஆனால், அவர்கள் துணிச்சலுடன் சண்டையிட்டவாறு, ஃபுராத் நதியைக் கடந்து திரும்பி வந்துவிட்டார்கள்.

இந்தப் போரில் முஸ்லிம்களின் நாலாயிரம் வீரர்கள் ஷஹீதானார்கள். அதே வேளையில், ஈரானியர்களின் ஆறாயிரம் வீரர்கள் கொல்லப்பட்டனர். ஈரானிய அரசின் உறுப்பினர்களுக்கு மத்தியில் பரஸ்பரம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது. பெஹ்மன் ஜாஸ்வியா திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இவ்வாறு, இந்தத் தோல்வி மற்றும் இழப்பை ஏற்படுத்தும் விளைவுகளில் இருந்து முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருந்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்களும் ஜிஸ்ர் போர் தொடர்பாக சிலவற்றைக் கூறியிருக்கிறார்கள்:

இஸ்லாத்திற்கு ஏற்பட்ட மிகப் பெரிய, அபாயகரமான தோல்வி ஜிஸ்ர் போர். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த இழப்பு எந்த அளவு பயங்கரமானதாக இருந்ததென்றால், இதனால் மதீனாவும் ஆடிப்போனது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனத்து மக்களை ஒன்றிணைத்து இவ்வாறு கூறினார்கள்:

'இப்போது, மதீனாவுக்கும் ஈரானுக்கும் இடையே எந்தத் தடையும் எஞ்சியிருக்கவில்லை. மதீனா முற்றிலும் பாதுகாப்பற்று இருக்கிறது. எதிரி சில நாட்களுக்குள் இங்கு வந்தடைந்து விடலாம். எனவே, நானே படைத்தளபதியாக ஆகி செல்ல விரும்புகிறேன்.'

மற்ற எல்லா மக்களுக்குமோ இந்த ஆலோசனை பிடித்துவிட்டது. ஆனால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:

'இறைவன் நாடாது இருக்கட்டுமாக! ஒருவேளை தாங்கள் போரில் ஷஹீதாகிவிட்டால், முஸ்லிம்கள் சிதறிப்போய் விடுவார்கள். அவர்களின் ஒற்றுமை முற்றிலும் சீர்குலைந்து போய்விடும். எனவே, வேறு யாரையாவது அனுப்ப வேண்டும். தாங்களே செல்ல வேண்டாம்.' இதனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவில் ரோமானியர்களோடு போர் புரிவதில் மும்முரமாக இருந்த ஹஸ்ரத் சஃத் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்: உங்களால் எத்தனை படையை அனுப்ப முடியுமோ அனுப்பி விடுங்கள். ஏனென்றால், இப்போது மதீனா முற்றிலும் பாதுகாப்பற்றதாக ஆகி விட்டது. எதிரியை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால், அவன் மதீனாவைக் கைப்பற்றி விடுவான்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இனிவருங்காலங்களிலும் தொடரும் என்று கூறிய பிறகு, குத்பாவின் இரண்டாவது பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பின்வரும் மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைத்து, ஜனாஸா காயிப் தொழவைப்பதற்கான அறிவிப்பை செய்தார்கள்:*

மதிப்பிற்குரிய ஃபதீஹ் அப்துஸ்ஸலாம் முபாரக் சாஹிப்: இவர்கள் எகிப்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கடந்த நாட்களில், 75 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் அவர்களின் தந்தை நக்ஷபந்தி வழிமுறையைப் பின்பற்றுபவராக இருந்தார். அவருக்கு அல்லாஹ்வின் அருளால் 88 வயதில் பைஅத்து செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. ஃபதீஹ் சாஹிப் அவர்கள் 10 வயதில் திருக்குர்ஆன் மனனம் செய்துவிட்டார்கள். கெய்ரோ பல்கலைக்கழகத்திலிருந்து பொறியியல் பட்டம் பெற்றார்கள்.

**1998** இல் மதிப்பிற்குரிய முஸ்தஃபா சாபித் சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத்தின் போதனைகள் குறித்து அறிமுகம் ஏற்பட்டது. முழுமையாக ஆழ்ந்து சிந்தித்து, நூல்களைப் படித்து துஆ செய்ததற்குப் பிறகு, **2001** இல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இமாம் மஹ்தியாக ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் பெற்றார். ஃபதீஹ் சாஹிப் அவர்கள் பல அறிவுசார்ந்த தொண்டுகள் ஆற்றுவதற்கு நல்வாய்ப்பு பெற்றார்கள். நூல்களை மொழிபெயர்த்துள்ளார்கள்.

**MTA** அல் அரபிய்யாவின் நிகழ்ச்சிகளில் பங்குபெற்றார்கள். உள்ளூர் ஜமாஅத்தில் நீண்டகாலம் தப்லீஃக் செயலராக இருந்து வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடும் அஹ்மதிய்யா கிலாஃபத்தோடும் காதியான் தாருல் அமானோடும் மிகவும் ஆழிய நேசம் கொண்டிருந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:-* ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு இல்ஹாம் வந்தது:

يَدْعُوْنَ لَكَ اَبْدَالُ الشَّامِ وَ عِبَادُاللّٰهِ مِنَ الْعَرَبِ

**யத்ஊன லக்க அப்தாலுஷ் ஷாமி வ இபாதுல்லாஹி மினல் அரப்**

அதாவது, உமக்காக சிரியாவின் சான்றோர்கள் துஆ செய்கிறார்கள். அரபு நாட்டிலிருந்து இறையடியார்கள் துஆ செய்கிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இது என்ன விவகாரம்! இது எப்போது எங்ஙனம் நிறைவேறும், வெளிப்படும் என்பதை அல்லாஹ்வே அறிவான். வல்லாஹு அஃலமு பிஸ்ஸவாப்!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* நாமோ பார்த்து விட்டோம்! அல்லாஹ்வின் அருளால் எங்கெல்லாம் அரபு ஜமாஅத்துகள் உருவாகின்றனவோ அங்கு, அரபுநாடுகளில் ஃபதீஹ் சாஹிப் போன்று கலப்பற்ற மக்கள் தோன்றுகின்றனர்.

*இவர்கள் மட்டுமின்றி, கனடா மற்றும் சிராலியோனின் முன்னாள் முபல்லிஃக் இன்சார்ஜ் கலீல் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய ரஸிய்யா பேகம் சாஹிபா அவர்கள், டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய சாயிரா சுல்தான் சாஹிபா அவர்கள், சிரியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய குஸ்வானுல் முஆஸமானீ சாஹிபா அவர்கள் ஆகியோரின் நற்குறிப்பையும் எடுத்துரைத்து, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர் படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**